**செய்தி வெளியீடு எண்:101** **நாள் :15.02.2016**

## செய்தி வெளியீடு

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 329 இளநிலை பயிற்சி அலுவலர்கள் காலியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்கு ஏற்கனவே இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. இதற்கான முதல்நிலை தேர்வு (Screening Test) 21.02.2016 (ஞாயிறு) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்வுக்கு விண்ணப்பித்தோர் 16.02.2016 முதல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் தேர்வு நுழைவுச்சீட்டை (Hall Ticket) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அனைத்து மாவட்டங்களிலும் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்வு நுழைவுச்சீட்டு உள்ளவர்கள் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**